Original Suit No.585/2018 நாள்: 27.11.2023

**பி.வா.சா.1 கருப்பண்ண கவுண்டர் அவர்களின் 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஏற்கனவே வியாபாரம் செய்து வந்தேன். மானாவாரி விவசாயமும் செய்து வந்தேன். திருமணம் ஆகும் வரை என் மகள் மற்றும் மகன் மற்றும் நான் ஆகியோர் ஒன்றாக தான் இருந்து வந்தோம். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே, திருமணத்திற்கு பிறகு மகன் தனியாக சென்று விட்டார். திருமணத்திற்கு பிறகு, வழக்கிற்கு பிறகுதான் என் மகன் தனியாக சென்று விட்டார் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட பூர்விக சொத்தில் தான் நானும் என் மகனும் விவசாயம் செய்து வந்தோம் என்றும், எனது மகன் வேறு எந்த தொழிலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர் தனியாக தறி பட்டறை வைத்துள்ளார். விவசாயத்தின் மூலமாக வந்த வருமானத்தை கொண்டு தான் நானும் என் மகனும் வழக்கு 3வது அயிட்ட சொத்தை கிரையம் வாங்கினோம் என்றால் சரியல்ல. பூர்விக சொத்தில் இருந்து வந்த உபரி வருமானத்தை கொண்டு தான் இன்னும் சில சொத்துக்களையும், கார்வழி கிராமத்தில் உள்ள சொத்துக்களையும் கிரையம் வாங்கினோம் என்றால் சரியல்ல. எனவே அவை பூர்விக சொத்துக்கள் என்றால் சரியல்ல. அதனால் நானும் என் மகனும் சேர்ந்து என் மகள் லெட்சுமிக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் செல்லாது என்றால் சரியல்ல. அதே போல 2001 வருடத்தில் என் மகன் மேற்படி பூர்விக சொத்துகளில இருநத வந்த வருமானத்தை கொண்டு சொத்தை கிரையம் செய்த இருப்பதால் அவை பூர்விக சொத்து என்றால் சரியல்ல. தாவா 3வது அயிட்ட சொத்து பூர்விக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை

கொண்டு வாங்கப்பட்டு 5ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் செய்து இருப்பதால் அது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நானும் என் மகனும் சேர்ந்து மற்ற பாகஸ்தர்களுக்கு பாகம் கிடைக்க கூடாது என்பதற்கு சில சொத்துக்களை விட்டுவிட்டு சில சொத்துக்களை மட்டுமே சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்து இருப்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்கு்முலத்தில் என் பூர்விக சொத்துக்களில் வருமானம் கிடைக்கவில்லை என்பதால் பக்கத்து நிலத்துகாரரர்களின் நிலத்தில் உள்ள மரங்களை வெட்டியும், ஆடு மாடுகளை விற்றும் வியாபாரம் செய்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதனால் நானும் என் மகனும் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றும் அது 4ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் 5ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் 4ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
DN: cn=R KANAGARAJ, ou=TIRUPPUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.